


**16.02.2025**

## தலைப்பு செய்திகள்

- **புதுதில்லி சர்வதேச ஜவுளி கண்காட்சி பாரத் டெக்ஸ்** 2025-ல் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று உரையாற்றுகிறார்.
- **ஆரோக்கியமான சமுதாயம்** வளர்ச்சியடைந்த தேசத்தை உருவாக்கும் என மத்திய இளைஞர்நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
- **தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி மேம்பாட்டு** பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.
- **ஊரக பொருளாதாரம் வளர்ச்சியடைய அரசின்** நலத்திட்டங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமென சட்டத்துறை அமைச்சர் திரு.ரகுபதி கேட்டுக்கொண்டுள்ளார்.
- **புபனேஸ்வரில் நடைபெறும் புரோ லீக் ஹாக்கி** மகளிர் பிரிவில் இந்தியா - இங்கிலாந்தை இன்று எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

**பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் நடைபெறும்** சர்வதேச ஜவுளி கண்காட்சி பாரத் டெக்ஸ் 2025-ல் இன்றுமாலை உரையாற்றுகிறார்.

மூலப்பொருட்கள் முதல் உற்பத்தி பொருட்கள் வரையிலான ஜவுளித்துறையின் புத்தாக்க நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் வகையில் நடைபெறும் இக்கண்காட்சியில் பல்வேறு நாடுகளை சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளில் கைத்தறி கைவினை பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு புவிசார் குறியீடு உள்ளிட்ட மத்திய அரசின் நடவடிக்கைகளால் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் பங்கேற்றுள்ளனர்.

மேலும் பருத்தி, சணல் துறைகளில் ஆற்றல் திறன் மேம்பாடு கட்டமைப்பு அதிகரிக்கப்பட்டதுடன், தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கத்தின் புத்தாக நடவடிக்கைகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஜவுளி மேம்பாட்டிற்கு வகைசெய்யும் என்பது இக்கண்காட்சியின் சிறப்பம்சமாகும்.

நாளையுடன் நிறைவடையும் இந்த 4 நாள் கண்காட்சியில் ஜவுளித்துறை மேம்பாடு தொடர்பான 70-க்கும் மேற்பட்ட கருத்தரங்குகள், குழு ஆலோசனைகள் இடம்பெறுகின்றன.

❖❖❖❖❖❖❖

## காசி தமிழ் சங்கமம்

**தமிழகம் காசி இடையேயான தொன்மையான** ஆன்மீக கலாச்சார பிணைப்புகள் ஒரே பாரதம்! உன்னத பாரதம்! இலக்கை நிலைநாட்டுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் நடைபெறும் 3-வது காசி தமிழ்சங்கமம் குறித்து அவர் வெளியிட்ட செய்தியில் வரலாற்று சிறப்பு மிக்க இந்நிகழ்ச்சியில் அனைவரும் பங்கேற்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவின் பன்முக கலாச்சாரத்தை காசி தமிழகம் இடையேயான பிணைப்புகள் மேலும் வலுப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே காசி தமிழ்ச்சங்கமம் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக சேலம், ஈரோடு, தர்மபுரி, நாமக்கல் மாவட்டங்களை சேர்ந்த இளைஞர்கள், நெசவாளர்கள், தொழில்முனைவோர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கொண்ட 76 பேர் கொண்ட குழு சேலம் ரயில் நிலையத்திலிருந்து இன்று புறப்பட்டு சென்றது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்பது மகிழ்ச்சி அளிப்பதாக கூறிய பயணிகள் இதற்கு ஏற்பாடு செய்த மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**மன்சுக் மாண்டவியா**

**ஆரோக்கியமான சமுதாயத்தின் மூலமே வளர்ச்சியடைந்த** தேசம் உருவாகும என மத்திய இளைஞர்நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

பிட்இந்தியா சைக்கிள் ஓட்டத்தை மும்பையில் இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் நடைபெறும் பிட் இந்தியா சைக்கிள் ஓட்டத்தில் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்று உடல் பருமன் குறைப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்த சைக்கிள் ஓட்டத்தின் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் உறுதிசெய்யப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

இதேபோல் கன்னியாகுமரியிலிருந்து சென்னை உடற்பயிற்சி விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை தேசிய சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர் மௌரிய புத்தா கன்னியாகுமரியில் இன்று தொடங்கிவைத்தார்.

பள்ளி மாணாக்கர் பங்கேற்றுள்ள இத்தொடர் ஓட்டம் நெல்லை, மதுரை, சேலம் வழியாக 13 நாட்களில் சென்னையில் நிறைவடையும்.

❖❖❖❖❖❖❖

**ரயில் நிலைய விபத்து**

**புதுதில்லி ரயில்நிலைய கூட்ட நெரிசலில் சிக்கி** உயிரிழந்தோரின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது.

இவ்விபத்து குறித்து உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

குடியரசு தலைவர் திருமதி.திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் இச்சம்பவத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளதுடன், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளனர்.

இவ்விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவியாக தலா 10 லட்சம் ரூபாயும்,

காயமடைந்தவர்களுக்கு இரண்டரை லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என ரயில்வே அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

**கல்வி, மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான ஒத்திசைவு** பட்டியலில் இருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில் இந்திய அரசியலமைப்பு மும்மொழி கொள்கையை கட்டாயமாக்கவில்லை என்றும், இக்கொள்கையை ஏற்க வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்துவது முறையாகாது என்றும் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

**அண்ணாமலை**

இதனிடையே வளர்ச்சியடைந்துள்ள உலகியல் தேவைகளுகு ஏற்ப தமிழக மாணாக்கரை தயார்படுத்துவதற்கு மும்மொழிக் கொள்கை இன்றியமையாதது என்று பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

ஏழை எளிய மாணாக்கர் பயன்பெறும் வகையில் அனைத்து அரசு பள்ளிகளிலும் தமிழ் ஆங்கிலத்துடன் 3-வது இந்திய மொழி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**தங்கம் தென்னரசு**

**தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி மேம்பாட்டு பணிகள்** முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகத்திற்கு இன்று அடிக்கல்நாட்டி பேசியஅவர், விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் தொல்பொருள் ஆராய்ச்சிப் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப் படுவதாக கூறினார்.

கீழடி தொல்பொருள் ஆராய்ச்சி பணிகளுக்கு நிலம் வழங்கியவர்களுக்கு இதற்கான ஆணைகளை வழங்கிய அவர், பூம்புகார் கைவினைபொருட்கள் விற்பனை நிலையத்தையும் திறந்து வைத்தார்.

மாநில கூட்டுறவு துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

**இதனிடையே கீழடி கிராமம் சிறந்த** பாரம்பரிய சுற்றுலா கிராமமாக தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் கொந்தகை கண்மாயில் படகு சவாரி உள்ளிட்ட 35 லட்சம் ரூபாய் மதிப்பிலான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

ரகுபதி

**தமிழக கிராமப்புறங்களில் குடிநீர், சாலை, மின்சாரம்,** சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான நடவடிக்கைகளில் அரசு சிறப்பு கவனம் செலுத்திவருவதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு.ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஊராட்சியில் பகுதிநேர நியாயவிலைக்கடை, அங்கன்வாடி மையம், கலையரங்கம் உள்ளிட்டவற்றை இன்று திறந்துவைத்து பேசியஅவர், ஊரக பொருளாதாரம் வளர்ச்சியடைய அரசின் நலத்திட்டங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

ஏழை எளிய மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்திவருவதையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

நேரு

**திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் விரைவில்** மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர் பஞ்சப்பூர் பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதி கட்டமைப்புகள் உயர்தரத்துடன் அமைக்கப்பட்டு வருவதாக கூறினார்.

மேலும் தற்போதைய மத்திய பேருந்து நிலையம் ஒருபோதும் அகற்றப்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

முன்னதாக திருச்சி மாவட்டத்தை சேர்ந்த 127 அரசுபள்ளி மாணவிகளுக்கு 11 லட்சம் ரூபாய் மதிப்பிலான கல்வி உதவித் தொகையை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

**ஊராட்சித் திட்டங்கள்**

**ஊராட்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் முதலிடம்** வகிப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஊராட்சிகளின் அதிகார பகிர்வு குறித்த தேசிய ஆய்வறிக்கையில் கட்டமைப்பு, செயல்பாடு, நிதி, திறன் மேம்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தமிழகம் சிறந்து விளங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வளங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிப்பது, நிதி பங்கீடு, திறன் மேம்பாடு உள்ளிட்ட 6 பிரிவுகளின்கீழ் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

**ஜல்லிக்கட்டு**

**மதுரை மாவட்டம் கீழக்கரையில் ஜல்லிக்கட்டு போட்டியை** மாநில வணிகவரித்துறை அமைச்சர் திரு. மூர்த்தி இன்று தொடங்கி வைத்தார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட காளைகளை அடக்க, 500 மாடுபிடிவீரர்கள் களத்தில் உள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**திண்டுக்கல் வாய்ஸ்**

**திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல்** ஜெரோனியம் வனப்பகுதியில் பற்றிஎரியும் காட்டுத்தீயை அணைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**கன்னியாகுமரி**

**கனனியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில்** சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**தாட்கோ மூலம் மகளிர் நிலஉடைமை திட்டத்தில்** தமிழகத்திலேயே பெரம்பலூர் மாவட்டத்தில் அதிக பயனாளிகள் உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ்பச்சாவ் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் 62 ஆதிதிராவிட பழங்குடியின மகளிருக்கு, 3 கோடி ரூபாய் மதிப்பிலான மானியத்தொகை வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

**நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்திலிருந்து** ஆலம்பாளையம் வரையிலான 4 கிலோமீட்டர் தூர மேம்பாலம் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**விபத்து**

**கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர்** செங்கணாங்கொல்லை பகுதியில் இருசக்கர வாகனமும், சுற்றுலா வேனும் நேருக்குநேர் மோதி கொண்ட விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

காயமடைந்த 5 பேர் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**ஹாக்கி**

**புபனேஸ்வரில் நடைபெறும் புரோ லீக் ஹாக்கி** மகளிர் பிரிவில் இந்தியா - இங்கிலாந்தையும்,

ஆடவர் பிரிவில் இந்தியா - ஸ்பெயினையும் இன்று எதிர்கொள்கிறது.

மற்றொரு போட்டியில் ஸ்பெயின் - ஜெர்மனி மகளிர் அணிகள் மோதுகின்றன.

❖❖❖❖❖❖❖

**கால்பந்து**

**கொல்கத்தாவில் நடைபெறும் ஐ.எஸ்.எல் கால்பந்து** போட்டியில் இன்றிரவு ஏழரை மணிக்கு முகமதியன் SC அணி - ஈஸ்ட்பெங்கால் FC அணியை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖